கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 19.08.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பார்த்தீனியம் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு முகாம்கள்

ஒன்றிய அரசின் களை ஆராய்ச்சி இயக்குநகரத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த களை மேலாண்மைத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 முதல் 22 ம் தேதி வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. அதன்படி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் களை மேலாண்மை பிரிவின் கீழ் விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்கும் பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த விழிப்புணர்வு முகாம்களின் தொடக்க நிகழ்வாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கிழக்குப் பண்ணை மற்றும் மத்தியப் பண்ணையில் பணிபுரியும் அனைத்து பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பார்த்தீனியம் களை மேலாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப. பரசுராமன் அவர்கள் முன்னிலையேற்று பார்த்தீனியம் மேலாண்மை பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்த விழிப்புணர்வு முகாம்களில் பார்த்தீனியம் களைச் செடி பற்றியும் அதன் நச்சுத் தன்மையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளான உழவியல், இரசாயன மற்றும் உயிரியல் முறைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டு அதனை சிறந்த முறையில் கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. மேலும், பார்த்தீனியச் செடிகளைப் பூக்கும் முன் பிடுங்கி உரமாக்குதல் பற்றியும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆகஸ்ட் 16 முதல் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட முகாம்களில் பேராசிரியர் மற்றும் களை மேலாண்மை பிரிவின் முதன்மை விஞ்ஞானி முனைவர். செ. ராதாமணி, இணைப்பேராசிரியர் முனைவர் ச.பாரதி ஆகியோர் பங்கேற்று இந்த நிகழ்ச்சியை சிறப்புற நடத்தினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**